காடு வளர்போம் ! காகிதம் செய்வோம் !
கற்றலை ஊக்குவிப்போம் !




# தரிசு தரும் பரிசு
# TNPL – ன் வனத்தோட்ட திட்டங்கள்

வெளியீடு
வனத் தோட்டப் பிரிவு

**தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம்**
காகிதபுரம், கரூர் – 639 136




# தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம்

## தொடக்கம்

TNPL என பிரபலமாக அழைக்கப்படும் தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனம் தமிழ்நாடு அரசால் 1983-ஆம் ஆண்டு கரூர் மாவட்டம் காகிதபுரத்தில் தொடங்கப்பட்டது.

## தனிச் சிறப்பு

உலக அளவில் காகித உற்பத்தியில் தனிச்சிறப்பு பெற்ற இந்நிறுவனம், கரும்புச் சக்கையில் இருந்து காகித உற்பத்தி செய்வதில் முன்னிலை பெற்று விளங்குகிறது. சர்க்கரை ஆலைகளிலிருந்து பெறப்படும் கழிவுப்பொருளான கரும்புச் சக்கையை மூலப்பொருளாக கொண்டு நவீன தொழில் நுட்பத்தில் காகிதத் தயாரிப்பில் ஈடுபட்டுள்ளது.

## சுற்றுச்சூழல் பாதுகாப்பு

நிறுவனம் இயற்கையை பாதுகாப்பதுடன் சுற்றுச்சூழல் பராமரிப்பிலும் பெரும் பங்கு வகிக்கிறது. கரும்புச்சக்கையை மூலப்பொருளாக பயன்படுத்துவதால் ஆண்டு ஒன்றுக்கு சுமார் 40,000 ஏக்கர் இயற்கை வனப்பகுதி அழிக்கப்படாமல் பாதுகாக்கப்படுகிறது. மேலும் ஆலைக்கு தேவையான கூழ்மரங்களை தானே உற்பத்தி செய்யும் நோக்கத்தோடு கடந்த 14 ஆண்டுகளில் சுமார் 1,24,000 ஏக்கர் பரப்பளவில் கூழ்மரங்களை சாகுபடி செய்து அறுவடை செய்து வருகிறது.

## வனத்தோட்ட திட்டங்கள்

தனியார் மற்றும் அரசுத்துறை நிறுவனங்கள், கல்வி நிறுவனங்களுக்கு சொந்தமான, சாகுபடி செய்யப்படாத தரிசு நிலங்களை கண்டறிந்து அந்நிலங்களை மேம்படுத்தி மரக்கூழ் மரங்களை நடவு செய்ய ஊக்குவித்து வருகிறது. வளர்ச்சி அடைந்த மரங்களை ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை அறுவடை செய்து காகிதத் தயாரிப்பிற்கு மூலப்பொருளாக பயன்படுத்துவதால் பயனற்று தரிசாக இருக்கும் நிலங்கள் பயனுள்ளதாக மாற்றப்படுவதுடன் மண் அரிப்பு தடுக்கப்பட்டு நிலங்களும் மேம்படுத்தப்படுகிறது. இத்தகைய உன்னதமான பலன்கள் அனைவருக்கும் சென்றடையவும், சிறு மற்றும் குறு விவசாயிகள் தங்கள் தரிசு நிலங்களிலிருந்து நிலையான வருவாய் பெறும் பொருட்டும் தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் இருவகையான வனத்தோட்ட திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

TNPL

- பண்ணைக் காடுகள் திட்டம்
- மூலதனக் காடுகள் திட்டம்

இந்த இரண்டு திட்டங்கள் மூலமாக தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் கூழ் மரங்களான தைலம், சுபாபுல், சவுக்கு, அகேசியா, மலைவேம்பு, சிசு மற்றும் குமிழ் தேக்கு மரத்தோட்டங்களை உருவாக்கி வருகிறது.

## பண்ணக்காடுகள் திட்டம்

- இத்திட்டம் சிறு மற்றும் குறு விவாசயிகளுக்கான திட்டம்
- கூழ்மர நாற்றுகளை மானிய விலையில் விவசாய நிலங்களுக்கே விநியோகிக்கிறது.
- வனத் தோட்டங்கள் உருவாக்குவதற்கு தொழில்நுட்ப ஆலோசனைகளை இலவசமாக வழங்குகிறது.
- நிலையான சந்தை வாய்ப்பை விவசாயிகளுக்கு வழங்குகிறது.
- அறுவடை காலத்தின் போது அரசு நிர்ணயிக்கும் சந்தை விலை அல்லது குறைந்தபட்ச ஆதாரவிலை இதில் எது அதிகமோ அதை விவசாயிகளுக்கு வழங்குகிறது.
- மேலும் கூழ்மரங்களின் அறுவடை மற்றும் போக்குவரத்துக்கு தேவையான அனைத்து உதவிகளையும் வழங்குகிறது.



ஒரு டன் பச்சை மரமானது 147 டன் நச்சு காற்றை வளிமண்டலத்தில் இருந்து நீக்குகிறது. அதுமட்டுமல்லாமல் 1.07 டன் பிராண வாயுவை உற்பத்தி செய்கின்றது. TNPL நிறுவனம் தரிசு நிலங்களில் மரம் பயிரிடுவதன் மூலம் பல லட்சம் டன் பிராண வாயுவை உற்பத்தி செய்ய காரணமாக உள்ளது.

## மூலதனக்காடுகள் திட்டம்

பருவநிலை மாற்றம், ஆள் பற்றாக்குறை, நேரடியாக விவசாயம் செய்ய இயலாத நிலை ஆகியவற்றால் பல ஆண்டுகளாக தரிசாக உள்ள, குறைந்த பட்சம் 50 ஏக்கர் நிலம் ஒரு தனிநபருக்கோ, குடும்பத்திற்கோ அல்லது ஒரு நிறுவனத்திற்கோ சொந்தமாக இருந்தால் இந்த திட்டத்தில் சேர்ந்து பங்கு பெறலாம். கூழ்மர சாகுபடியில் முழு பொறுப்பையும் நிறுவனமே ஏற்றுக் கொள்கிறது. ஒப்பந்த காலம் 10 ஆண்டுகள்.

ஒப்பந்த அடிப்படையில் நில மேம்பாடு முதல் அறுவடைவரை உள்ள அனைத்து செலவையும் நிறுவனமே ஏற்றுக்கொள்ளும். கூழ்மர அறுவடை மூலம் கிடைக்கும் மொத்த வருவாயில் 70 சதவீதம் நிறுவனத்திற்க்கும் 30 சதவீதம் நிலத்தின் உரிமையாளர்களுக்கும் வழங்கப்படும்.

## உயர்ந்த தரம் ! நிறைந்த மகசூல் !
## மிகுந்த லாபம் !

| சாகுபடிக் குறிப்பு | தைலம், சுபாபுல், அகேசியா, மலைவேம்பு, குமிழ் தேக்கு | சவுக்கு |
|---|---|---|
| நடவேண்டிய இடைவெளி | 3m x 1.35m | 1.35m x 1.35m |
| நாற்றுகளின் எண்ணிக்கை | 1000 | 2200 |
| பயிற்சுழற்சி | 5 ஆண்டுகள் | 4 ஆண்டுகள் |
| 1 ஏக்கருக்கான சராசரி மகசூல் | 25 MT * | 40 MT* |

* மகசூல் நிலத்தின் தன்மை மற்றும் பாரமரிப்பினை பொருத்து மாறுபடும்

## தொடர்பு கொள்ள வேண்டிய எண்கள்

| மண்டலம் | மாவட்டங்கள் | கைப்பேசி எண் |
|---|---|---|
| தெற்கு | புதுக்கோட்டை, விருதுநகர், திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி, சிவகங்கை, திண்டுக்கல், மதுரை,தேனி,இராமநாதபுரம் | 94425 91433 |
| கிழக்கு | தஞ்சாவூர், திருவாரூர், அரியலூர், பெரம்பலூர், நாகப்பட்டினம், திருச்சிராப்பள்ளி | 94425 91417 |
| வடக்கு | கடலூர், விழுப்புரம், திருவண்ணாமலை, வேலூர், திருவள்ளூர், காஞ்சிபுரம், பாண்டிச்சேரி | 94425 91437 |
| மேற்கு | கரூர், ஈரோடு, கோவை நாமக்கல், சேலம், தர்மபுரி, கிருஷ்ணகிரி | 94425 91430 |

TNPL

## மேலும் விவரங்களுக்கு

முதுநிலை மேலாளர், வனத்தோட்டம்
**வனத்தோட்டத் துறை**
தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம்

காகிதபுரம் கரூர், தமிழ்நாடு - 639 136.
தொலைபேசி-04324-277001
முதல் 10 வரை

**94425 91407, 94425 91408**
**plantation@tnpl.co.in**

MEDIA 4 AGRI
+91 94454 88544